
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 80 | 4 Pages | 22.10.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 80 | 4 பக்கங்கள் | 22.10.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ககன்யான் மாதிரி விண்கலம் சோதனை தாமதம்; இஸ்ரோ தகவல்



ஸ்ரீஹரிகோட்டா, அக். 22

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து, மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் முதல் ஆளில்லா டிவிடி1 ராக்கெட் இன்று காலை 8 மணிக்கு விண்ணில் ஏவப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதற்கான இறுதி கட்ட பணியான 13 மணி நேர கவுண்ட்டவுன் நேற்று இரவு 7 மணிக்கு தொடங்கியது.

இந்நிலையில், ககன்யான் மாதிரி விண்கலம் சோதனையில் தாமதம் ஏற்பட்டு உள்ளது. இதன்படி காலை 8 மணிக்கு பதிலாக காலை 8.30 மணிக்கு விண்கலம் விண்ணில் ஏவப்படும். வானிலையில் ஏற்பட்டு உள்ள மாற்றம் காரணத்தினால் விண்கல சோதனையில் தாமதம் ஏற்பட்டு உள்ளது என இஸ்ரோ தெரிவித்து உள்ளது.

பூமியிலிருந்து புறப்பட்ட ராக்கெட் 8 நிமிடங்களில் திட்டமிட்ட 17 கிலோமீட்டர் என்ற இலக்கை சென்றடையும். அதன் பிறகு அதில் பொருத்தப்பட்டுள்ள விண்கலம் தனியாக பிரிந்து வங்க கடலில் பாராசூட் மூலம்பாதுகாப்பாகஇறங்கும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.ராக்கெட்டின் செயல்பாடுகளும், அதில் பொருத்தப்பட்டுள்ள கருவிகளின் செயல்பாடுகளும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## ஹமாஸ் விடுவித்த 2 அமெரிக்கர்களுக்கும் முழு ஆதரவு; அதிபர் பைடன் உறுதி



வாஷிங்டன், அக். 22

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த 7ந்தேதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. எல்லைக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டதுடன், பலரை பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றது. இதனை தொடர்ந்து, இஸ்ரேல் அரசும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. பணய கைதிகளை மீட்கும் முயற்சி நடந்து வருகிறது.

இதுவரை200பேரைஹமாஸ்பயங்கரவாதிகள் பணய கைதிகளாக சிறை பிடித்து வைத்துள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படை கூறுகிறது.

இந்நிலையில், ஹமாஸ் பயங்கரவாதிகள் பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றவர்களில்அமெரிக்காவின்சிகாகோவை சேர்ந்த 2 பெண்கள் விடுவிக்கப்பட்டு உள்ளனர். மனிதநேய காரணங்களுக்காக அவர்கள் விடுவிக்கப்பட்டு உள்ளனர் என கூறப்படுகிறது. அவர்கள் ஜூடித் தை ரானன் மற்றும் அவருடைய 17 வயது மகள், நடாலி ரானன் என தெரிய வந்துள்ளது.

இதுபற்றி எக்ஸ் சமூக ஊடகத்தில் பைடன் வெளியிட்ட செய்தியில், ஹமாஸ் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட 2 அமெரிக்கர்களுடனும் நான் பேசியுள்ளேன்.

அவர்கள் இருவரும் குணமடையவும் மற்றும் நலம்பெறவும் அமெரிக்க அரசு முழு அளவில் ஆதரவளிக்கும் என அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என பதிவிட்டு உள்ளார்.

அமெரிக்கர்களின் அனைத்து குடும்பத்தினரையும் ஜில் மற்றும் நான் எனஇருவரும்எங்களுடையமனதில்மிகநெருக்கத்தில்வைத்திருக்கிறோம் என பைடன் தெரிவித்து உள்ளார்.

ஹமாஸ் பிடியில் இருந்து 2 அமெரிக்கர்களும் விடுவிக்கப்பட்ட சூழலில், பைடன் இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளார். அவர்கள் இருவரும் இஸ்ரேல் படைகளின் வசம் உள்ளனர் என தி டைம்ஸ் ஆப் இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

## பணய கைதிகளாக சிறை பிடித்த 2 அமெரிக்கர்களை விடுவித்தது ஹமாஸ் அமைப்பு



டெல் அவிவ், அக். 22

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த 7ந்தேதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.எல்லைக்குள்புகுந்துதாக்குதலில் ஈடுபட்டதுடன், பலரை பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றது. இதனை தொடர்ந்து, இஸ்ரேல் அரசும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. பணய கைதிகளை மீட்கும் முயற்சி நடந்து வருகிறது.

இஸ்ரேல் ராணுவம் தரை, வான் மற்றும் கடல் வழியேயான தாக்குதலை நடத்ததிட்டமிட்டு உள்ளது எனதகவல் தெரிவிக்கின்றது. இந்தநிலையில், தெற்கு இஸ்ரேலின் எல்லையருகே காசாவை முற்றுகையிடும் வகையில், நூற்றுக்கணக்கான பீரங்கிகள் மற்றும் ராணுவ வீரர்களை இஸ்ரேல் குவித்துள்ளது. இந்த தரைவழி தாக்குதல் பல வாரங்கள் நீடிக்க கூடும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் பணய கைதிகளை விடுவிக்கும் முயற்சியும், பேச்சுவார்த்தையும் நடந்து வருகின்றன. இதுபற்றி இஸ்ரேல் பாதுகாப்பு படையின் செய்தி தொடர்பாளர் டேனியல் ஹகாரி கூறும்போது, பணய கைதிகளை மனிதநேய காரணங்களுக்காக விடுவிக்கிறோம் என உலகத்திற்கு இந்நேரத்தில் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு காட்டி கொள்கிறது.

ஆனால் உண்மையில், நாங்கள் ஒரு கொலைகார குழுவுடன் பேசி கொண்டு இருக்கிறோம்.

புதிதாக பிறந்த குழந்தைகள், சிறுவர் சிறுமிகள், பெண்கள் மற்றும் முதியோர்களை அவர்கள் சிறை பிடித்து வைத்திருக்கின்றனர் என கூறியுள்ளார்.

இதன்படி, ஹமாஸ் பயங்கரவாதிகள் பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றவர்களில் 2 அமெரிக்க பெண்மணிகள் விடுவிக்கப்பட்டு உள்ளனர்.

அவர்கள் ஜூடித் தை ரானன் மற்றும் அவருடைய 17 வயது மகள், நடாலி ரானன் என தெரிய வந்துள்ளது. அவர்கள் இருவரும் சிகாகோவை சேர்ந்தவர்கள்.

ஜூடித்துக்கு உடல்நல பாதிப்பு என்பதற்காக மனிதநேய அடிப்படையில் அவர் விடுவிக்கப்பட்டு உள்ளார் என அவருடைய குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

எனினும், இதுவரை 200 பேரை ஹமாஸ் பயங்கரவாதிகள் பணய கைதிகளாக சிறை பிடித்து வைத்துள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படை கடுமையாக விமர்சித்து இருக்கிறது.

# தி.மு.க.வை கற்பனையில் கூட யாராலும் அழிக்க முடியாது: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, அக்.22

சென்னை ஷெனாய் நகரில் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

பாராட்டுகளைப் போலவே விமர்சனங்களையும் நான் விரும்புகிறேன்.

விமர்சனங்களில் தனிப்பட்ட நலனை விட பொதுநலன் தான் அதிகம் இருக்கும். எனவே அதை விரும்புகிறேன்.

தி.மு.க.வை கற்பனையில்கூடஅழிக்க முடியாது.

கொள்கை என்றால் கிலோ எவ்வளவு என கேட்பது அ.தி.மு.க.

பாஜகவும், அதிமுகவும் நாணயம் இல்லாத நாணயத்தின் இரு பக்கங்கள்.

மிரட்டலுக்கு எல்லாம் அஞ்சமாட்டோம் என்பதால்



பொய் மூட்டைகளை கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

போலியான பெருமைகள் தேவையில்லை, உண்மையான உழைப்புக்கு அங்கீகாரம் கிடைத்தால் போதும்.

துர்கா ஸ்டாலின் கோவிலுக்குச் செல்வது அவரது தனிப்பட்ட விருப்பம்.

ஆரியத்திற்கு தான் நாங்கள் எதிரி, ஆன்மிகத்திற்கு அல்ல.

நமது கருத்துக்கள் தமிழகத்தைத் தாண்டி இந்தியா முழுமைக்கும் ஒலிக்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், நீட் தேர்வு ரத்து இயக்கத்திலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கையெழுத்திட்டார்.

## குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியல்

உடுமலை, அக். 22

உடுமலை ஒன்றியத்திற்குட்பட்ட ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி கிராமத்தில் 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர் . கிராமத்தின் அருகே ஐக்கம் பாளையம் குட்டிய கவுண்டனூர் உள்ளிட்ட பகுதிகளிலும் சேர்த்து 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர்.

இப்பகுதியில் திருமூர்த்தி அணையில் இருந்து கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர்வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் தினமும் 60 ஆயிரம் லிட்டர் வரை குடிநீர் வினியோகிக்கப்பட்டு வந்த நிலை



யில் காலப்போக்கில் 30 ஆயிரம் லிட்டர்ஆக குறைந்தது. இந்தநிலையில் கடந்த 27 நாட்களாக இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படவில்லை. ஊராட்சி தலைவர் மோகன வள்ளி ராஜசேகர் மற்றும் அதிகாரிகள் ஒன்றிய அதிகாரிகளிடம் தண்ணீர் தட்டுப்பாடு குறித்து புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.இதை அடுத்து ஆண்டிகவுண்டனூர் பகுதி கிராம மக்கள் காலிகுடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதிகாரிகள் யாரும் வராத நிலையில் பொதுமக்கள் தாங்களாகவே கலைந்து சென்றனர்.

## உடுமலை பகுதியில் கால்நடை சுகாதாரம் விழிப்புணர்வு முகாம்

உடுமலை, அக். 22

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் உடுமலை கோட்டம் மடத்துக்குளம் ஒன்றியம் கொழுமம் ஊராட்சி குளத்துப்பாளையம் கிராமத்தில் நேற்று சிறப்பு கால்நடை மருத்துவ சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமில் 1086 கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டது.சிறந்த கால்நடை வளர்ப்போருக்கு மேலாண்மைக்கான விருதுகளும் சிறந்த கிடேரி கன்றுகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. முகாமில் கால்நடை உதவி மருத்துவர்கள் கார்த்திகேயன்,பிரகாஷ், ராஜ்குமார் மற்றும் கால்நடை ஆய்



வாளர்கள் கார்த்தி,பத்மா கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் அடங்கிய குழுவினர் சிகிச்சை மற்றும் தடுப்பூசி பணியினை மேற்கொண்டனர்.

இது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை உடுமலை கோட்ட உதவி இயக்குனர் வி. ஜெயராமன் கூறியதாவது:

உடுமலை கோட்டத்தில் மொத்தம் 60 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தலா 20 முகாம்கள் வீதம் 2024 ம் ஆண்டு மார்ச் வரை நடைபெற உள்ளது. முகாம் நடைபெறும் இடம் மற்றும் நாள் குறித்த விபரம் சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தகம் மற்றும் ஊராட்சி மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படும்.முகாமில் சிகிச்சை, மலடு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை, ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம், தாது உப்பு, வெறி நோய் தடுப்பூசி மற்றும் கிசான் கடன் அட்டை பெறுவதற்கான விண்ணப்பம் முதலிய சேவைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. எனவே கால்நடை வளர்ப்போர் தங்கள் பகுதியில் நடைபெற உள்ள சிறப்பு கால்நடை மருத்துவ சுகாதார விழிப்புணர்வு முகாமுக்கு கால்நடைகளை கொண்டு வந்து மேற்படி சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறுஅவர் தெரிவித்தார்.

## உடுமலையில் கலைத்திருவிழா போட்டி



உடுமலை, அக். 21

உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உடுமலை வட்டார அளவிலானகலைத்திருவிழாபோட்டிகள்கடந்த 18 ந்தேதி முதல் இன்று வரை நடைபெறுகிறது. உடுமலை பாரதியார் நூற்றாண்டு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கடந்த வாரம் பள்ளி அளவில் கலைத்திருவிழா போட்டிகள் நடைபெற்றது. பள்ளி அளவில் சுமார் 400 மாணவிகள் கலந்து கொண்டனர்.ஒவ்வொரு பிரிவிலும் பள்ளி அளவில் முதலிடம் பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் வட்டார அளவிலான கலைத் திருவிழாவில் பங்கேற்கின்றனர்.

9ம்,10 ம் வகுப்பிற்கான போட்டிகளில் மொத்தமாக 74 மாணவிகள் பங்கேற்றனர்.பள்ளி தலைமை ஆசிரியர் ப. விஜயா ஆலோசனையின் பேரில் தமிழ் ஆசிரியர்கள் வே.சின்னராசு,ஆர். ராஜேந்திரன், ஆசிரியை வை.விஜயலட்சுமி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.கலைத்திருவிழாவில் பங்கேற்கும் மாணவிகள் சாலையில் திரளாக சென்றதைப் பார்த்து பொதுமக்கள் ரசித்தனர்.

## ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் இநாம் திட்டத்தின் கீழ் கொப்பரை ஏலம்

உடுமலை, அக். 21

உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் இநாம் திட்டத்தின் கீழ் கொப்பரை ஏலம் நடைபெற்றது.

உடுமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வியாழக்கிழமை தோறும் இநாம் திட்டத்தின் கீழ் கொப்பரை ஏலம் நடைபெற்று வருகிறது.இதில் பல்வேறு பகுதிகளைசேர்ந்த விவசாயிகள்கொப்பரையை கொண்டு வந்து பயன் பெற்று வருகின்றனர்.நேற்று பெற்ற கொப்பரை ஏலத்தில் 22 விவசாயிகள் 67 மூட்டை கொப்பரையை மறைமுக ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.இதில் 8 வியாபாரிகள் கலந்து கொண்டனர்.ஒரு கிலோ முதல் தரம் தேங்காய் கொப்பரை ரூ 73.12 முதல் ரூ 82.28 க்கும் , இரண்டாம் தர கொப்பரை ரூ 66.89 முதல் ரூ 71.89 க்கும் இநாம் இணையதளத்தில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஏலம் இறுதி செய்யப்பட்டது.அதன்படி ரூ .2 லட்சத்து 50 ஆயிரத்திற்கு கொப்பரை ஏலம் போனது. கொப்பரை வரத்து குறைந்ததால் அதன் விலை ரூ.2 அதிகரித்தது.இதனால் ஏலத்துக்கு வருகை தந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.மேலும் கூடுதல் விவரங்களுக்கு 9443962834 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று உடுமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் கண்காணிப்பாளர் செந்தில்குமார் தெரிவித்தார்.



# தென்மண்டல அளவிலான தடகள போட்டியில் சிறப்பிடம் பிடித்த திருப்பூர் வீரர்களுக்கு பாராட்டு

திருப்பூர், அக். 21

தெலுங்கானா மாநிலத்தில் 34வது தென் மண்டல அளவிலான ஜூனியர் தடகள சேம்பியன்ஷிப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் தென் மண்டலங்களைச் சேர்ந்த ஆந்திரம், கர்நாடகம், கேரளம்,லட்சத்தீவு,புதுச்சேரி, தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தடகள வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சுமார் 2,000 பேர் கலந்து கொண்டனர்.


இதில் 14, 16, 18, 20 வயதுக்கு உள்பட்டோர் என நான்கு பிரிவுகளாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் தமிழக அணியில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த 5 வீரர்கள், 5 வீராங்கனைகள் என மொத்தம் 10 பேர் பங்கேற்றனர். இதில் 3 தங்கம், 4 வெள்ளி மற்றும் ஒரு வெண்கல பதக்கம் பெற்றனர். மேலும் சிறந்த தடகள வீரர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதில் தமிழக அணியினர் பங்கேற்ற அனைத்துப் போட்டிகளிலும் பதக்கங்களை வென்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தையும், அனைத்துப் பிரிவிலும் சிறந்த வீரர், வீராங்கனை பட்டமும் வென்றுள்ளனர்.

போட்டியில் வெற்றி பெற்ற திருப்பூர் மாவட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கு, திருப்பூர் தடகள சங்கத்தின் தலைவர் சண்முகசுந்தரம், செயலாளர் முத்துகுமார், மூத்த துணைத் தலைவர் மோகன் கார்த்திக், துணைத் தலைவர்கள் வெங்கடேஷ், சந்தீப்குமார், ஜெயபிரகாஷ், மதிவாணன், இணைச் செயலாளர்கள் நிரஞ்சன், அழகேசன், ராமகிருஷ்ணன், தொழில்நுட்பக்குழுத் தலைவர் மனோகர் செந்தூர்பாண்டி, துணைத் தலைவர் சஜீவ் தாமஸ் உள்ளிட்டோர் வெள்ளிக்கிழமை பாராட்டு தெரிவித்தனர்

# அத்திக்கடவுஅவிநாசி திட்டத்திற்கு கைகொடுக்குமா வடகிழக்கு பருவமழை: 3 மாவட்ட மக்கள் எதிர்பார்ப்பு



அவிநாசி, அக். 22

அத்திக்கடவு அவிநாசி திட்டத்துக்காக கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய 3 மாவட்ட மக்கள் 65 ஆண்டுகளுக்கும் மேலாக காத்து கொண்டிருக்கின்றனர். 3 தலைமுறைக்கும் மேலாக கானல்நீராக இருந்த திட்டத்துக்கு கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து 2019ம் ஆண்டு டிசம்பர் 25ந் தேதி பணியாணை வந்ததை தொடர்ந்து பணிகள் தொடங்கப்பட்டன. 27 மாதங்களில் திட்டம் முடிக்கப்படும் என்றும், 2021ம் ஆண்டு ஏப்ரல் 27ந் தேதிக்குள் திட்டம் நிறைவடையும் என கணிக்கப்பட்டது. கடந்த சட்டப்பேரவை தேர்தலின்போது, அத்திக்கடவு அவிநாசி திட்டம் அ.தி.மு.க.வின் தேர்தல் பரப்புரையில் முக்கிய அங்கம் வகித்தது. அந்த அளவுக்கு முக்கியத்துவம் தரப்பட்ட திட்டம் இது. திட்டம் தொடங்கிய பிறகு, இயற்கை வேறு மாதிரியாக சதிராடியது. உலகை உறைய வைத்த கொரோனா தொற்றால், அத்திக்கடவுஅவிநாசி திட்ட பணிகள் முடங்கின.

தற்போது 99 சதவீத பணிகள் நிறைவடைந்து, விரைவில் திறக்கப்படும் என 3 மாவட்ட மக்களும் எதிர்பார்ப்பில் காத்திருக்க, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரில் பில்லூர் அணையில் தண்ணீர் வந்தால் தான், ஒன்றரை டிஎம்சி., தண்ணீர் எடுத்து திட்டத்தை திறக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்து, திட்டத்தை விரைவில் திறக்க வேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றனர். இதுகுறித்து அத்திக்கடவுஅவிநாசி திட்ட போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியம் கூறியதாவது:

திட்டத்தில் 99 சதவீதம் பணிகள் நிறைவடைந்துள்ளன. 32 பொதுப்பணித்துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய குளங்கள் மற்றும் 921 குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் என 1045 நீர்நிலைகள் பயன்பெறும் திட்டம் இது. இதில் 900க்கும் மேற்பட்ட நீர் நிலைகளில் சோதனை ஓட்டம் நிறைவடைந்துள்ளது. 100க்கும் மேற்பட்ட நீர்நிலைகளில் சோதனை ஓட்டம் நிறைவடையவில்லை. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சுணக்கத்தின் காரணமாக திட்டம் தற்போது வரை 99 சதவீதம் பணிகள் நிறைவடைந்தும், திட்டம் நிறைவடையவில்லை.

இந்த திட்டத்தில் 6 குடிநீரேற்று நிலையங்கள் உள்ளன. இதில் முதல் மற்றும் 2ம் குடிநீரேற்று நிலையங்களுக்கு இடைப்பட்ட, கூடுதுறை பவானி தொடங்கி சித்தோடு வரையிலான சுமார் 2 கி.மீ. நீளத்துக்கு பிரதான குழாய் பதிப்புக்காக நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. நிலத்தடி நீராதாரத்துக்கான முக்கியமான திட்டம் என்பதை கடந்து, குடிநீர், விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கான குடிநீர் உட்பட பல்வேறு நீராதாரத் தேவைகளை பூர்த்தி செய்கிறது என்பது தான் பிரதானமாக பார்க்கிறோம். திட்டத்தில் மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளம், குட்டைகளை இணைக்க வேண்டும். வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் விட்டுவிட்டால் உரிய நீர் நிர்வாகம் செய்து, திட்டத்தை விரைவுப்படுத்தி திறக்க வேண்டும். ஒரு வேளை வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை என்றால், திட்டம் மேலும் தாமதாகும் என்பது போல் தெரிகிறது.

இந்நிலையில் இன்னும் 4 மாதங்களுக்கு பிறகு பாராளுமன்றத் தேர்தல் பணிகளை அனைத்து கட்சிகளும் தொடங்கிவிடும் என்பதால், தேர்தல் நன்னடத்தை விதிகள் தொடங்கிவிடக்கூடிய சூழல் உள்ளிட்டவைகளை கருத்தில் கொண்டு, திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். மேலும் இந்த திட்டத்தை திறக்கும்போதே மாநில அரசு, விடுபட்ட குளம், குட்டைகளை இணைக்கும் திட்டத்தை தொடங்க வேண்டும். அது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையை தயார்செய்ய வேண்டும். அத்திக்கடவு அவிநாசி திட்ட ஒற்றைக்குடையின் கீழ், விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் கால்நடை விவசாயிகள் என அனைத்து தரப்புக்குமான முழுப்பயனளிக்கும் திட்டமாக இது இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# டி.எஸ்.பி.யை கண்டித்து திருப்பூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், அக். 22

பிஏபி., வாய்க்காலுக்கு இடம் கொடுத்த விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் கடந்த 16ந்தேதி தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் உள்ளிட்ட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்ட போது, போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கூறி காவல்துறையினர் அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது காங்கேயம் டிஎஸ்பி., பார்த்திபன் விவசாயிகளை தாக்கியதாகவும்,

இதில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் நிர்வாகி ஈஸ்வரன் பலத்த காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

எனவே காங்கேயம் டி.எஸ்.பி., மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பாக தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் கோரிக்கையை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

# கிட்ஸ் கிளப் முதுநிலைப் பள்ளியில் நவராத்திரி விழா




திருப்பூர், அக். 22

பெண் தெய்வங்களைக் கொண்டாடும் விழாவான நவராத்திரி பண்டிகை திருப்பூர் கிட்ஸ் கிளப் முதுநிலைப் பள்ளியில் கொண்டாடப்பட்டது. பாரம்பரிய முறையில் கொலுப் படிக்கட்டுகளை அமைத்து அவற்றில் பல்வேறு கடவுள் மற்றும் அவதார புருஷர்களின் பொம்மைகளை வைத்து, பக்தி பாடல்களைப் பாடியும் கடவுள் ஸ்லோகங்களை இசைத்தும் மாணவர்கள் வழிபாடு நடத்தினர்.

மேலும் ஒவ்வொரு வகுப்பும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கொலுப்படிக் கட்டுகளை அமைத்திருந்தனர்.

குறிப்பாக இந்த ஆண்டு இந்தியா ஜி20 நாடுகளின் தலைமையை ஏற்றதை நினைவு கூறும் ஜி20 கொலு, ஷேக்ஸ்பியரின் கவிதையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட வாழ்வின் ஏழு படிநிலைகள், இந்தியப் பேரரசர்களின் சாம்ராஜ்யம், விளையாட்டுத்துறையில் இந்தியாவின் பெருமைகள் தொடர்பான கொலு ஆகியவை காண்போரை வெகுவாக கவர்ந்தன.

விழாவில் கிட்ஸ் கிளப் முதுநிலைப் பள்ளியின் தலைவர் மோகன் கே. கார்த்திக், பள்ளியின் இயக்குநர் ரமேஷ், நிர்வாக இயக்குநர் ஐஸ்வர்யா நிக்கில், செயலாளர் நிவேதிகா மற்றும் பள்ளியின் முதல்வர் தீபாவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் நகராட்சி காடையூரான் வலசில் மருத்துவம் மற்றும் மகள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை வழங்கினார்.



அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் மேட்டுக்கடையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் முத்தூர், காங்கேயம் கூட்டுகுடிநீர் திட்டத்தின் நீருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தொடர் விடுமுறை திருப்பூரில் இருந்து வெளியூர்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கம்

திருப்பூர்,அக்.21

தொடர் விடுமுறை என்பதால் பலரும் வெளியூர் செல்வர் என்பதால் பயணிகள் வசதிக்காக திருப்பூர் மண்டலத்தில் இருந்து 145 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

திருப்பூர் கோவில்வழி பஸ்நிலையத்தில்இருந்து, சிவகாசி, சிவகங்கை, மதுரை, தேனி, திருச்செந்தூர், திருநெல்வேலி, செங்கோட்டை, நாகர்கோவில், சங்கரன் கோவில் உள்ளிட்ட பகுதிகளுக்கு 75 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. புதிய பஸ் நிலையத்தில் இருந்து,திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணத்துக்கு 40 சிறப்பு பஸ்கள், மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சேலம், திருவண்ணாமலைக்கு 30 பஸ்கள் என மொத்தம் 145 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது.

போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறுகையில், சிறப்பு பஸ்களில் வழக்கமான கட்டணமே வசூலிக்கப்படும்.

கூட்டத்துக்கு ஏற்ப இரவில் பஸ்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றனர்.

# பெண் மீது தண்ணீர் ஊற்றிய சம்பவம்: திருப்பூர் பஸ் நிலைய கடை ஊழியர்கள் 2 பேர் மீது வழக்கு

திருப்பூர், அக். 22

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட காமராஜர் சாலையில் கலைஞர் கருணாநிதி மத்திய பேருந்து நிலையம் உள்ளது.

இங்கு பொலிவுறு நகரம் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்ட ஏராளமான கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இந்நிலையில், அங்குள்ள டீக்கடை முன்பாக அமர்ந்திருந்த பெண் மீது தண்ணீர் ஊற்றிய வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானது. ஏற்கனவே கடைக்கு வெளியே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்த நிலையில், கடையின் வழித்தடத்தில் அமர்ந்திருந்ததாக குற்றம்சாட்டி அந்த பெண்ணின் மீது தண்ணீர் ஊற்றியது மட்டுமில்லாமல், அப்பெண்ணை அவமரியாதையாகவும் கடை ஊழியர்கள் பேசி உள்ளனர்.

இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானதை தொடர்ந்து, மாநகராட்சி உதவி ஆணையர் முன்னிலையில் மாநகராட்சி அதிகாரிகள் கடையின் முன் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை பறிமுதல் செய்ததோடு, கடைக்கு 'சீல்' வைத்தனர்.

மேலும் திருப்பூர் தெற்கு போலீசார் கடையின் டீ மாஸ்டர் அனில்குமார், ஊழியர் வெங்கடேஷ் ஆகிய 2பேர் மீது, பொது இடத்தில் பெண்களை அவதூறாக பேசியதாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆயுதபூஜையையொட்டி அலங்கார பொருட்கள் வாங்க பொதுமக்கள் ஆர்வம்



திருப்பூர்,அக். 22

கல்விக்கடவுளான சரஸ்வதி தேவியை வழிபடும் வகையில், கல்வி நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்படும்.அதே சமயம் தொழில், வணிகம், வர்த்தகம் மேற்கொள்ளும் தொழிற்சாலைகள், கடைகள், அலுவலகங்கள் ஆகியவற்றில் ஆயுத பூஜை கொண்டாடப்படும்.

தொழில் மற்றும் வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் எந்திரங்கள், கருவிகள் உள்ளிட்ட உபகரணங்கள் சுத்தப்படுத்தியும், அலங்கரித்தும் வழிபாடு நடத்தப்படும். அதே போல் அனைத்து வாகனங்களையும் அலங்கரித்தும் பூஜை நடத்துவர்.

பூஜைகளின் போது, வாகனங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றில், வண்ண காகிதங்கள், பூ வேலைப்பாடு செய்த மின்னும் வகையிலான அலங்கார வடிவங்கள், செயற்கை பூக்கள் கொண்ட தோரணங்கள், மாலைகள் கொண்டும் அலங்காரம் செய்வது வழக்கம்.

அவ்வகையில் பூஜையில் பயன்படும் அலங்கார காகித தோரணங்கள், ரிப்பன்கள், மாலைகள், சரஸ்வதி படம் அச்சிட்ட ஆயுத பூஜை எழுத்துகள் கொண்ட வடிவங்கள், ஜொலிக்கும் ஜிகினா காகித டிசைன்கள் ஆகியன கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளன. சிறிய அளவிலான எல்.இ.டி.,சரவிளக்குகள், நிறம் மாறி எரியும் பல வர்ண விளக்கு சரங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் திருப்பூர் பகுதி கடைகளில் விற்பனையாகிறது. பொதுமக்கள், தொழில் நிறுவனத்தினர் அதனை ஆர்வமுடன் வாங்கி வருகின்றனர்.

# வரி உயர்வை குறைக்க வேண்டும் வாகன உரிமையாளர்கள் வலியுறுத்தல்

திருப்பூர், அக். 22

சட்டசபையில் அனைத்து விதமான வாகனங்களுக்கும் வாகன வரி உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. வரி உயர்வுக்கு வாகன உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் பலரும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

கோவை, திருப்பூர் மாவட்ட பொக்லைன் எந்திர உரிமையாளர் சங்க நிர்வாகி ஒருவர் கூறியதாவது:

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜே.சி.பி., எந்திரங்கள் இயங்கி வருகின்றன. கடந்த 25 ஆண்டுகளில் வாகனங்களின் மீது இது போன்ற ஒரு வரி விதிப்பு அமல்படுத்தப்பட்டது இல்லை.

உதாரணத்துக்கு தற்போதைய சூழலில் 10 லட்சம் ரூபாய்க்கு புதிய வாகனம் வாங்கினால், வரியுடன் சேர்த்து, 12 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டி இருக்கும். இதனால், புதிதாக வாகனம் வாங்குபவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறையும். புதிய பழைய வாகனங்களின் உதிரி பாகங்கள் விலையும் உயரும். இதன் அடிப்படையில் வண்டி வாடகை, ஆள் கூலி, இதர பொருட்களின் விலை உள்ளிட்டவையும் உயரும்.

ஏற்கனவே பெட்ரோல் டீசல் விலை உயர்வு காரணமாக, ஜே.சி.பி., வாடகை கடந்த ஓராண்டுக்கு முன் உயர்த்தப்பட்டது. உயர்த்திய வாடகையால் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த வரி உயர்வால் புதிதாக வண்டி வாங்கி வாடகைக்கு தொழில் செய்ய நினைப்பவர்கள் யோசித்துப்பாருங்கள். இதனால் பழைய வாகனங்களை விற்பனை செய்பவர்கள் மட்டும் பயன் பெறுவார்கள்.

மற்றபடி வாகன தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இந்த வரி உயர்வால், மறைமுகமாக அனைத்தின் விலையும் உயர்ந்து பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

எனவே வரி உயர்வு குறித்து தமிழக அரசு பரிசீலித்து குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பாரதிய ஜனதா கட்சி தலைவர் அண்ணாமலை வீட்டின் அருகே உள்ள கொடிக்கம்பம் அகற்றம்



சென்னை, அக். 22

சென்னை கிழக்கு கடற்கரை சாலை பனையூர் பகுதியில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையின் இல்லம் இருக்கிறது. அவரது இல்லத்துக்கு அருகில் உள்ள சுமார் 50 அடி உயரமுள்ள பாஜக கொடி கம்பத்தில் கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்த நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதி பொது மக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் புகார் அளித்திருந்தனர்.

இந்த புகாரின் பேரில் நெடுஞ்சாலை துறையினர் அந்த கொடிக்கம்பத்தை அகற்றுவதற்கு ஜேசிபி உடன் வந்திருந்தனர். இந்த நிலையில் அங்கிருந்த 500க்கும் மேற்பட்ட பாஜகவினர் கொடி கம்பத்தை அகற்ற விடாமல் ஜேசிபியின் கண்ணாடியை உடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நள்ளிரவில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சுமார் 150க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு வந்த தாம்பரம் மாநகர காவல் ஆணையர், பாஜகவினருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சு வார்த்தையில் எந்த விதசுமூகமான உடன்பாடுகளும் எட்டப்படாத நிலையில் பாஜகவினரை குண்டுகட்டாக கைது செய்து நீலாங்கரை, பனையூர் பகுதியில் இருக்கிற தனியார் திருமண மண்டபங்களில் அடைத்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் பாஜக தலைவர் அண்ணாமலை இல்லம் அருகே உள்ள கொடி கம்பத்தை போலீசார் அகற்றி உள்ளனர். இதனை அகற்றும் போது பாஜகவினர் மற்றும் போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இது அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கோவை மாவட்டத்தில் 97 ஆயிரம் பெண்கள் மகளிர் உரிமை தொகை கேட்டு மேல்முறையீடு

கோவை, அக். 22

தமிழகத்தில் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் உரிமைத் தொகை திட்டம் செப்.15ல் தொடங்கப்பட்டது.

கோவை மாவட்டத்தில் 7 லட்சத்து 41 ஆயிரத்து 799 கார்டுதாரர்கள் இதற்கு விண்ணப்பித்து இருந்தனர். விதிமுறைக்கு உட்பட்டு தகுதியானவர்கள் தேர்வு செய்து வங்கி கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டது. தகுதி இருந்தும் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக ஏராளமான பெண்கள் நினைத்ததால், அந்த பெண்கள் மேல்முறையீடு செய்ய கால அவகாசம் அளிக்கப்பட்டது.

இதுதவிர விண்ணப்பம் பெற்றவர்களில், பலரும் பூர்த்தி செய்து விட்டு கொடுக்காமல் இருந்தனர். அவர்களுக்கும் தற்போது வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதையடுத்து கலெக்டர் அலுவலகம், தாலுகா அலுவ லகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்களில் அமைத்த உதவி மையங்களுக்கு ஆயிரக்கணக்கான பெண்கள் வந்து நிராகரிப்பு செய்ததற்கான காரணங்களை கேட்டறிந்து, மேல்முறையீடு செய்துள்ளனர்.

கோவை மாவட்டத்தில் 64 ஆயிரம் பெண்கள் இது வரை மேல்முறையீடு செய்துள்ளனர். ஏற்கனவே பெறப்பட்டவற்றில் பரிசீலனையில் உள்ளது என குறுந்தகவல் அனுப்பப்பட்ட 33 ஆயிரம் விண்ணப்பதாரர்களின் தகுதியை கள ஆய்வு செய்ய வேண்டி உள்ளது.

மேலும் மாநகராட்சி பகுதியில் அதிகமானோர் விண்ணப்பித்து இருப்பதால் உதவி கமிஷனர்களை பொறுப்பாளர்களாக நியமித்து, களப்பணிக்கு பில் கலெக்டர்களை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பணிக்கு மாவட்ட அளவில் 438 ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக வருவாய்த்துறையினர் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் உரிமை தொகை கேட்டு 64 ஆயிரம் பெண்கள் மேல்முறையீடு செய்துள்ளனர். ஏற்கனவே 33 ஆயிரம் விண்ணப்பங்கள் என மொத்தம் 97 ஆயிரம் பேரின் விவரங்கள் குறித்து கள ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

கள ஆய்வுக்கு செல்லும் ஊழியர்களுக்கு சிம் கார்டு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் மேல்முறையீடு செய்தவர்களின் மொபைல் போனுக்கு தொடர்பு கொண்டு சொந்தவீடு இருக்கிறதா? வருமான வரி செலுத்துபவர் வீட்டில் இருக்கிறாரா? கார் வைத்துள்ளனரா? போன்ற கேள்விகளை கேட்டு பதிவு செய்வார்கள்.

அவர்களது பதிலில் திருப்தி இல்லை என்றால், வி.ஏ.ஓ., அல்லது பில் கலெக்டர்கள் நேரில் சென்று கள ஆய்வு செய்து இதற்கென உருவாக்கியுள்ள பிரத்யேக செயலியில் பதிவேற்றம் செய்வார்கள்.

துணை கலெக்டர் அந்தஸ்திலான அதிகாரிகள், கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். விண்ணப்பங்கள் அதிகமாக இருப்பதால் 45 நாட்கள் ஆக வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# உயர் மின்னழுத்த கம்பி அறுந்து விழுந்ததால் ரெயில் போக்குவரத்து சேவையில் பாதிப்பு



ஈரோடு, அக். 22

ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குழந்தைகள் படிப்புக்காக, தொழிலு க்காக, வேலைக்காக சொந்த ஊரைவிட்டு ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர்.

இவ்வாறு வேறு மாவட்ட ங்களை சேர்ந்தவர்கள் தொடர் விடுமுறை கார ணமாக சொந்த ஊரை நோக்கி படையெடுப்பது வாடிக்கையாகி வருகிறது. இதனால் ரெயில் நிலையம், பஸ் நிலையங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக காண ப்படும்.

தற்போது சரஸ்வதி பூஜையை முன்னிட்டு பள்ளி, கல்லூரி, அரசு அலுவலகங்களுக்கு தொடர் விடுமுறை வருகிறது.

அதாவது சனி, ஞாயிறு, திங்கட்கிழமை சரஸ்வதி பூஜைவிடுமுறை, செவ்வாய்க்கிழமை விஜயதசமி விடுமுறை என தொடர்ந்து 4 4 நாட்கள் விடுமுறை வருகிறது

இதையொட்டி சொந்த ஊர்களுக்கு செல்ல மக்கள் படை எடுக்கத் தொடங்கியு ள்ளனர். நேற்று மாலை ஈரோடு பஸ் நிலையத்தில் வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

குறிப்பாக கோவை, சேலம், மதுரை, கரூர் செல்லும் பஸ்களில் கூட்டம் நிரம்பி காணப்பட்டது. திருநெல்வேலி, சென்னை, நாகர்கோவில் போன்ற தொலைதூர பயணத்திற்கு மக்கள் முன் பதிவு செய்திருந்தனர்

இதனால் அனைத்து பஸ்களும் கூட்டம் நிரம்பி காணப்பட்டது. மக்கள் குடும்பம் குடும்பமாக சொந்த ஊருக்கு சென்றவண்ணம் இருந்தனர். வார இறுதி நாட்களில் பயணிகள் சிரமமின்றி செல்வதற்காக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் 52 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதே போல் ஈரோடு ரெயில் நிலையத்தில் வழக்கத்தை விட இன்று காலை பயணிகள் கூட்டம் அதி கமாக இருந்தது. ஏற்கனவே முன்பதிவு செய்திருந்த பயணிகள் எந்த ஒரு சிரம மின்றி தங்கள் குடும்பத்துடன் சென்றனர்.

முன் பதிவு செய்யாத பயணிகள் ரெயி லில் இடம் பிடிக்க போட்டா போட்டி போட்ட னர். குறிப்பாக திருநெல்வேலி, சென்னை, மதுரை செல்லும் ரெயி ல்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்ப ட்டது.

முன்பதிவு இல்லாத பெட்டிகள் நிரம்பி வழிந்தன.

# திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட 5 நாடோடி பெண்களை சிறையில் அடைப்பதில் சிக்கல்: உளுந்தூர்பேட்டை போலீசார் புலம்பல்

கள்ளக்குறிச்சி, அக். 22

உளுந்தூர்பேட்டை அண்ணாநகரை சேர்ந்தவர் ஸ்டிபன்ராஜ். தனியார் வங்கி ஊழியர். இவரது மனைவி ஜெனிபர் (வயது 27). வீட்டில் தனியாக இருந்தார்.

அப்போது அவ்வழியே பிச்சை எடுத்து வந்த பெண்கள், ஜெனிபரிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டனர்.

வீட்டிற்குள் சென்று தண்ணீர் எடுத்து வந்து பெண்களுக்கு கொடுத்த நேரத்தில், அதே கும்பலை சேர்ந்த மற்றொரு பெண், வீட்டிற்குள் புகுந்து பீரோவை திறந்து 10 பவுன் நகையை திருடிக்கொண்டு தப்பிவிட்டார். சிறிது நேரம் கழித்து வீட்டிற்குள் வந்து பார்த்த ஜெனிபர், பீரோ திறந்திருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். அதிலிருந்த 10 பவுன் நகை கொள்ளைபோன விஷயத்தை அக்கம் பக்கத்தினரிடம் கூறினார்.

இதையடுத்து பிச்சை எடுப்பது போல வந்த பெண்களை தேடும் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் பக்கத்து தெருவில் நடுந்து சென்று கொண்டிருந்தனர். அவ்வழியே சென்றவர்களின் உதவியுடன் 5 பெண்களை மடக்கிப்பிடித்த ஜெனிபர், அவர்களை உளுந்தூர்பேட்டை போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். அவர்களிடமிருந்த 10 பவுன் நகையை பறிமுதல் செய்த போலீசார் அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

இதில் நாடோடிகளாக வாழ்ந்து வரும் இந்த பெண்கள், ஊர் ஊராக சென்று பிச்சை எடுப்பது போல நடித்து, தனியாக உள்ள பெண்களிடம் பேச்சு கொடுத்து, அவர்களின் வீட்டில் கொள்ளையடிப்பதை தொழிலாக செய்து வருவது போலீசாருக்கு தெரியவந்தது. மேலும், ஈரோட்டை சேர்ந்தவர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட 5 பெண்களும், அய்யப்பன் மனைவி முத்தம்மாள் (36), கோபால் மனைவி மீனாட்சி (30), ஜீவா மனைவி கவிதா (36), சுப்புடு மனைவி மங்கம்மாள் (35), கண்ணன் மனைவி முனியம்மாள் (35) என்பது தெரியவந்தது. இதையடுத்து இவர்கள் மீது வழக்கு பதிவு செய்த போலீசார், இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க முடிவு செய்தனர்.

ஆனால், இவர்களிடம் தங்களின் பெயர், விலாசம் போன்றவைகளுக்கான ஆவணங்கள் ஏதும் இல்லை.

இதனால் இவர்களின் கைரேகைகளை பதிவு செய்வதிலும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதிலும் போலீசாருக்கு நடைமுறை சிக்கல்கள் இருந்தது. இதனால் உளுந்தூர்பேட்டை போலீசார் செய்வதறியாது திணறி வருகின்றனர். இதையடுத்து கள்ளக்குறிச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மோகன்ராஜின் கவனத்திற்கு இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை உளுந்தூர்பேட்டை போலீசார் வைத்துள்ளனர். அவரின் சிறப்பு அனுமதி கிடைத்தால் மட்டுமே நாடோடி பெண்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கமுடியுமென உளுந்தூர்பேட்டை போலீசார் புலம்பி வருகின்றனர்.

# அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளில் நெல் அறுவடை பணி தொடங்கியுள்ளது



உடுமலை, அக். 22

உடுமலை அருகேயுள்ள அமராவதி அணை வாயிலாக, திருப்பூர், கரூர் மாவட்டத்திலுள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திலுள்ள கல்லாபுரம், ராமகுளம், கொமரலிங்கம், கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கணியூர், காரத்தொழுவு, கடத்தூர் ஆகிய 8 ராஜவாய்க்கால் பாசனத்திற்குட்பட்ட 7,520 ஏக்கர் நிலங்களுக்கு, அணையிலிருந்து கடந்த ஜூன் 1ல் தண்ணீர் திறக்கப்பட்டது.

இதனையடுத்து விவசாயிகள் குறுவை நெல் சாகுபடி பணியை துவக்கினர். தற்போது இப்பகுதிகளில் நடவுசெய்த நெல் வளர்ந்து அறுவடைக்கு தயாராகியுள்ளது. கணியூர், சோழமாதேவி உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை துவங்கியுள்ள நிலையில், அடுத்தடுத்து கடத்தூர், கண்ணாடிபுத்தூர் பகுதிகளிலும் அறுவடையை துவக்க விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

ஒரே சமயத்தில் இப்பகுதிகளில் அறுவடை துவங்கியுள்ள நிலையில், விவசாயிகளுக்கு தேவையான அறுவடை எந்திரங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் பற்றாக்குறையால் எந்திர அறுவடைக்கு விவசாயிகள் தயாராக உள்ள நிலையில், மடத்துக்குளம் வட்டார பகுதிகளில் பருவ மழையும் துவங்கியுள்ளது.

இதனால் அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்கள் பாதித்து வருகின்றன. நெல் வயல்களில், தாள்கள் தலைசாய்ந்து, நெல் மணிகள் வயல்களிலேயே உதிர்ந்து, பெரும் இழப்பை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர்.

எனவே பருவ மழைக்கு முன், விளைந்த நெல் அறுவடை செய்யும் வகையில் தேவையான அளவு நெல் அறுவடை எந்திரங்களை கொண்டு வர வேளாண் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில் மடத்துக்குளம் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில், அரசு நேரடி நெல் கொள்முதல் மையம் துவக்கப்பட்டுள்ளது. இங்கு நெல்லுக்கான ஆதார விலை சன்ன ரகம் குவிண்டாலுக்கு ரூ. 2,203 மற்றும் ஊக்கத்தொகை ரூ.107 என ஒரு குவிண்டால் 2,310 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. அதே போல் பொது ரகம் ஆதார விலை, ரூ.2,183, ஊக்கத்தொகை ரூ.82 என ஒரு குவிண்டால் நெல் 2,265 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது, அறுவடை துவங்கியுள்ள நிலையில் விவசாயிகள் கொள்முதல் மையத்தில் பதிவு செய்து வருகின்றனர். கணியூர், கடத்தூர், காரத்தொழுவு, சோழமாதேவி பகுதி விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அணைக்குள் பட்டி போட்டு மாடு மேய்க்க அனுமதி வழங்க வேண்டும்: மலைவாழ் மக்கள் வலியுறுத்தல்



உடுமலை, அக். 22

உடுமலை மலைவாழ் மக்கள் சங்கத்தினர் கோட்டாட்சியருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

ஆனைமலை புலிகள் காப்பகம், உடுமலை வனச்சரகம், மாவடப்பு , காட்டுப்பட்டி மலைவாழ் மக்கள் குடியிருப்பை சேர்ந்தவர்கள், பாரம்பரியமாக வறட்சியான காலங்களில், ஆழியார் அணைக்குள் தாங்கள் வளர்க்கும் மாடுகளை கொண்டு சென்று பட்டி அமைத்து அங்கேயே தங்கி மேய்ப்பது வழக்கமாக கொண்டுள்ளனர்.

நடப்பாண்டு 3 மாதத்திற்கு முன் 20 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், ஆழியார் அணைக்கரையில் மாட்டுப்பட்டி அமைத்து அங்கேயே தங்கி, பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடங்களில் மாடுகளை மேய்த்து வருகின்றனர். மழை அதிகம் பெய்து அணைக்கு நீர் வந்தால், குடியிருப்பு பகுதியில் தீவனப்புல் வளர்ந்து விட்டால் மாடுகளை திரும்ப கொண்டு வந்து விடுவார்கள். இந்நிலையில் வனத்துறையைச் சேர்ந்தவர்கள், மாடுகளை மேய்க்கக்கூடாது என கூறி வருகின்றனர்.

இதற்கு முன் இதே போல் பிரச்சினை ஏற்பட்ட போது, உடுமலை வருவாய் கோட்டாட்சியர் தலையிட்டு, வன உரிமை சட்டப்படி பாரம்பரியமாக எங்கெல்லாம், தங்கி மாடுகளை மேய்த்தார்களோ, அங்கெல்லாம் தங்கி மேய்ப்பதற்கு சட்டப்படி உரிமை உள்ளது. எனவே மலைவாழ் மக்கள் ஆழியார் அணையில் மாடுகளை மேய்க்க அனுமதியை பெற்றுக்கொடுத்தார். அதற்கு பின் கடந்த 5 ஆண்டு காலமாக மாடுகளை மேய்த்து வருகிறோம்.

அணையில் மாடுகளை மேய்க்க வரும் போது, தாடக நாச்சியம்மன் சுவாமிக்கு நேர்ந்து சாமி கிடா விட்டு வளர்ப்பது வழக்கம். திரும்ப செல்லும் போது கிடா வெட்டி சாமி கும்பிட்டு விட்டுச்செல்வார்கள். அதற்கும் தடை விதிக்கின்றனர். எனவே, கோட்டாட்சியர் தலையிட்டு, பாரம்பரியமாக மாடுகளை மேய்க்கும் மலைவாழ் மக்கள் உரிமையை பாதுகாத்து, மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும். இவ்வாறு அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாராபுரம் அரசு ஆஸ்பத்திரியில் ரூ.24 கோடியில் கூடுதல் கட்டிடம்: அமைச்சர் கயல்விழி ஆய்வு



தாராபுரம், அக்.22

தாராபுரத்தில் ரூ.24 கோடி மதிப்பில் அரசு ஆஸ்பத்திரியின் கூடுதல் கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அமைச்சர் கூறியதாவது:

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தாராபுரம் அரசு ஆஸ்பத்திரியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடப்பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. கூடுதல் கட்டிடம் ரூ.24 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் தாராபுரம் தலைமை அரசு மருத்துவர் சத்தியராஜ், நகர தி.மு.க. செயலாளர் முருகானந்தம், தலைமை செயற்குழு உறுப்பினர் தனசேகர், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் வெ.கமலக்க ண்ணன், நகர துணை செயலாளர் தவச்செல்வன், மாவட்ட வக்கீல் அணி தலைவர் செல்வராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆரோன் செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரசு பஸ்சை சிறைப்பிடித்து மக்கள் போராட்டம்

காங்கயம், அக். 22

ஈரோட்டில் இருந்து பழனி நோக்கி அரசு பேருந்து சென்று கொண்டிருந்தது. பழனி பணிமனை நிர்வாகத்துக்கு உள்பட்ட அந்தப்பேருந்தில் காங்கயம் அருகே பழையகோட்டை பகுதியை சேர்ந்த ரவி என்பவர் ஈரோட்டில் ஏறி, பழையகோட்டைக்கு பயண சீட்டு கேட்ட போது, பேருந்து நடத்துநர் பழையகோட்டை நிறுத்தத்தில் பேருந்து நிற்காது என கூறியதாக தெரிகிறது.

இது குறித்து பழைய கோட்டையில் உள்ள தனது நண்பர்களுக்கு ரவி, தகவல் தெரிவித்துள்ளார். அப்போது, பழைய கோட்டை பேருந்து நிறுத்தம் அருகே பேருந்து வந்தபோது பொதுமக்கள் அந்த பேருந்தை சிறைபிடித்தனர். பின்னர் அரசு உத்தரவிட்டும் பழையகோட்டை நிறுத்தத்தில் ஏன் பேருந்தை நிறுத்த மறுக்கிறீர்கள் என கூறி நடத்துநரிடம் பொது மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த காங்கயம் போலீசார் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, இனி வரும் நாட்களில் பழைய கோட்டை நிறுத்தத்தில் பேருந்து நின்று செல்லும் என உறுதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பொது மக்கள் பேருந்தை விடுவித்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மதுரை மத்திய சிறையில் சிறப்பு மருத்துவ முகாம்



மதுரை, அக். 22

முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மத்திய சிறையில் யாதவா மகளிர் கலைக்கல்லூரி மற்றும் இந்திய பல் மருத்துவ சங்க மதுரை கிளை மற்றும் தனியார் மருத்துவமனை இணைந்து சிறப்பு பல் மருத்துவ முகாம் நடந்தது. முகாமை மதுரை சிறைத்துறை டி.ஐ.ஜி. பழனி, மத்திய சிறை கண்காணிப்பாளர் பரசுராமன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மதுரை மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறையில் நடைபெற்ற பல் மருத்துவமுகாமில் 250 கைதிகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டது.



## சாதி பிரச்சினை கதையில் இனியா

ஜேம்ஸ் கார்த்திக், இனியா, சோனியா அகர்வால் ஆகியோர் 'சீரன்' என்ற படத்தில் நடித்துள்ளனர். அருந்ததி நாயர், கிரிஷா குருப், ஆடுகளம் நரேன், சென்றாயன், கராத்தே வெங்கடேஷ் உள்ளிட்ட மேலும் பலரும் இதில் நடித்து இருக்கிறார்கள்.

இந்தப் படத்தை ராஜேஷ் எம்.உதவியாளர் துரை கே.முருகன் டைரக்டு செய்துள்ளார். படம் பற்றி அவர் கூறும்போது, ``உண்மை சம்பவங்களை மையமாக வைத்து இந்தப் படம் தயாராகிறது. சாதி பிரச்சினையால் பாதிக்கப்படும் ஒரு குடும்பத்துக்கு மறுக்கப்படும் உரிமைகள் அதனால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் ஊரார் அந்த குடும்பத்தை ஏற்றுக்கொண்டார்களா?என்பதைமையமாகவைத்து படம் தயாராகி உள்ளது.

சாதியே இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் படமாக இது இருக்கும். ஜேம்ஸ் கார்த்திக், இனியா ஆகியோர் இருவிதமான தோற்றங்களில் நடித்துள்ளனர். கிளைமாக்ஸில் இடம் பெறும் ஒரு பாடல் காட்சியில் ஜேம்ஸ் கார்த்திக் ஆக்ரோஷமாக நடனம் ஆடி உள்ளார். இந்த காட்சி படத்தின் திருப்புமுனையாக இருக்கும்'' என்றார். படத்தை ஜேம்ஸ்கார்த்திக்,நியாஸ்ஆகியோர்தயாரித்துள்ளனர்.



## தனுசுடன் என்னை ஒப்பிட வேண்டாம் நடிகர் பிரதீப் ரங்கநாதன்



தனுசுடன் என்னை ஒப்பிட வேண்டாம் என்று நடிகர் பிரதீப் ரங்கநாதன் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

'கோமாளி' படத்தை இயக்கிய பிரதீப் ரங்கநாதன், 'லவ் டுடே' படத்தின்மூலம் கதாநாயகன் ஆனார். இந்த படம் பெரிய வெற்றி பெற்றது. படத்தில் வரும் மாமா குட்டி வசனம் பெரிய அளவில் டிரெண்டிங் ஆனது. தற்போது இன்னொரு படத்திலும் நாயகனாக நடிக்கிறார்.

இந்த நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பிரதீப் ரங்கநாதன் பேசும்போது, "லவ் டுடே' படத்தில் மாமா குட்டி என்று ஒரு விஷயத்தை சொல்லி இருப்பேன். உண்மையிலேயே நம்மை சுற்றி நிறைய மாமா குட்டிகள் இருக்கிறார்கள். எக்ஸ் பாய்பிரண்ட், எக்ஸ் கேர்ள் பிரண்ட் இல்லாதவர்களே இப்போது கிடையாது. எனவே எல்லாருமே கிட்டத்தட்ட மாமா குட்டிகள் தான்.

நான் பேசுவது, எனது செயல்பாடுகள், எனது நடவடிக்கை எல்லாமே நடிகர் தனுஷ் போல இருப்பதாக சொல்கிறார்கள் ஆனால் அது உண்மையா? என்று எனக்கு தெரியவில்லை. என்னை பொறுத்தவரை நான் வேண்டுமென்றே எதையும் செய்யவில்லை.

நான் தனுஷ்போல் இருப்பதாக ஒப்பிட்டு பேசுவது தவறு என்று நினைக்க தோன்றுகிறது. அவர் எங்கேயோ இருக்கிறார். நான் இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறேன்" என்றார்.

## சவாலான வேடங்களை விரும்பும் வரலட்சுமி



தமிழ், தெலுங்கு திரையுலகில் பிரபல நடிகையாக உயர்ந்துள்ளார் வரலட்சுமி சரத்குமார். ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமான நடிப்பால் ரசிகர்களை கவர்ந்து வருகிறார். வில்லி வேடங்களையும் ஏற்கிறார்.

தற்போது 'மேன்ஷன் 24' என்ற வெப் தொடரில் சத்யராஜுடன்இணைந்துநடித்துஇருக்கிறார்.ஐதராபாத்தில் நடந்தநிகழ்ச்சியொன்றில்வரலட்சுமிசரத்குமார்பங்கேற்று பேசும்போது, "நான் எப்போதும் சவாலான கதாபாத்திரங்களில் நடிக்கவே விரும்புகிறேன்.

'மேன்ஷன் 24' வெப் தொடரில் அப்படிப்பட்ட கதாபாத்திரம் கிடைத்துள்ளது. இதில் நான்தந்தையை தேடி செல்லும்மகளாகநடித்துள்ளேன்.நான்பேய்கள்இருக்கிறது என்றால் நம்பமாட்டேன். ஆனால் இந்த வெப் தொடரை பார்த்த பிறகு எனக்குள் பயம் ஏற்பட்டு உள்ளது.

சத்யராஜ் சிறந்த நடிகர். அவருடன் இணைந்து நடித்தது மகிழ்ச்சியாக உள்ளது. நான் வீட்டில்இரவுநேரத்தில்பேய்படங்கள்பார்க்கமாட்டேன்.எனவேபகல்நேரத்திலேயே இந்த தொடரை பார்க்கிறேன்'' என்றார்.

## பெண்களை இம்சிப்பது கேவலம்; வலைத்தள அவதூறால் மெஹ்ரின் வருத்தம்

தமிழில்'நெஞ்சில்துணிவிருந்தால்'படம்மூலம்அறிமுகமானமெஹ்ரின்தொடர்ந்து தனுசுடன்'பட்டாஸ்', 'நோட்டா' ஆகியபடங்களிலும்நடித்து இருக்கிறார். தெலுங்கில் அதிகபடங்களில்நடித்து முன்னணி நடிகையாக வலம் வருகிறார். தற்போது மெஹ்ரின் நடிப்பில் 'சுல்தான் ஆப் டெல்லி' என்ற வெப் தொடர் ஓ.டி.டி. தளத்தில் ரிலீசாகி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இதில் மெஹ்ரின் ஆபாசமாக நடித்து இருப்பதாக ரசிகர்கள் விமர்சித்தும் கண்டித்தும் வலைத்தளத்தில் அவதூறு பதிவுகள் வெளியிட்டு வருகிறார்கள். இது மெஹ்ரினுக்கு வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து மெஹ்ரின் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சுல்தான் ஆப் டெல்லி வெப் தொடரில் இடம்பெற்றுள்ள பலாத்கார மானபங்க காட்சியை ஆபாச காட்சியாக வர்ணித்து என்னை அவதூறு செய்யும் நோக்கில் வலைத்தளத்தில் கருத்துகள் பதிவிடுவது வேதனையாக இருக்கிறது.

நடிப்பை கலையாக, தொழிலாக பார்க்கும் நடிகைகள் கதையின் ஒரு பாகமாக ஆபாச காட்சிகள் இருந்தால் அதில் நடிக்கத்தான் வேண்டும். ஆபாச காட்சிகளும் நடிப்பில் ஒரு பாகம்தான்.

உலகில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள்தான் தொடரில் உள்ளது. ஆனால் என்னை மோசமாக அவதூறு செய்கின்றனர். அப்படி பேசுபவர்களுக்கு சகோதரிகள், மகள்கள் இருப்பார்கள். பெண்களை இம்சிப்பது, அவர்களிடம் கொடூரமாக நடந்து கொள்வது ஒரு கேவலமான செயல்'' என்று கூறியுள்ளார்.

## 'தங்கலான் சம்பவம் விரைவில்..' ஜி.வி.பிரகாஷ் கொடுத்த அப்டேட்!



இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் 'தங்கலான்'. இந்தப் படத்தை ஞானவேல் ராஜா தயாரிக்கிறார். இந்த படத்திற்கு ஜி.வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எஃப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த படத்தின் படப்பிடிப்பு அண்மையில் நிறைவடைந்த நிலையில், பொங்கல் பண்டிகையை யொட்டி படம் ரிலீசாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் 'தங்கலான்' படத்தின் டீசர் விரைவில் வெளியாக உள்ளதாக இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனது 'எக்ஸ்' சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "தங்கலான் சம்பவம் விரைவில்... அசத்தலான டீஸர் விரைவில் வெளியாக உள்ளது" என பதிவிட்டுள்ளார்.

## 'மார்க் ஆண்டனி' படத்தை இந்தியில் வெளியிட லஞ்சம் கேட்ட விவகாரம்; நடிகர் விஷாலின் உதவியாளரிடம் சி.பி.ஐ. விசாரணை



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் விஷால், எஸ்.ஜே.சூர்யா ஆகியோர் நடித்த 'மார்க் ஆண்டனி' திரைப்படம் அண்மையில் திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனிடையே இந்த படத்தின் இந்தி பதிப்பிற்காக மும்பை சென்சார் போர்டுக்கு ரூ.6.5 லட்சம் லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்ததாக நடிகர் விஷால் புகார் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட வீடியோவில், 'மார்க் ஆண்டனி' படத்தை பார்க்கவே மும்பை சென்சார் போர்டு அதிகாரிகள் ரூ.3 லட்சம் கேட்டதாகவும், சான்றிதழ் வழங்க ரூ.3.5 லட்சம் கேட்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தார். மேனகா என்ற இடைத்தரகரிடம் மொத்தம் ரூ.6.5 லட்சம் ரூபாய் பணத்தை இரண்டு தவணைகளாக கொடுத்து 'மார்க் ஆண்டனி' படத்தை இந்தியில் வெளியிட்டேன் என நடிகர் விஷால் கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த புகார் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க மத்தியஅரசுஉத்தரவிட்டது. இந்தநிலையில்நடிகர்விஷால்அளித்தபுகார்தொடர்பாக, மேனகா, ராமதாஸ்மற்றும்ராஜன்ஆகிய 3 இடைத்தரகர்கள்மற்றும்பெயர்குறிப்பிடாத சென்சார் போர்டு அதிகாரிகள் மீது சி.பி.ஐ. அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும்இந்தவிவகாரத்தில்நடிகர்விஷாலின்உதவியாளர்ஹரிகிருஷ்ணன்என்பவர் மூலமாக தரகர்கள் லஞ்சம் பெற்றதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் மும்பையில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஹரிகிருஷ்ணனிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த 2 நாட்களாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து: டி.ஜி.வைஷ்ணவா அணி 5வது வெற்றி



சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில் எஸ்.என்.ஜெ. குழுமம் ஆதரவுடன் 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து போட்டி எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் லீக் ஆட்டம் ஒன்றில் டி.ஜி.வைஷ்ணவா அணி 1825, 2516, 25 19, 2512 என்ற செட் கணக்கில் சுங்கா இலாகாவை தோற்கடித்தது. 7வது ஆட்டத்தில் ஆடிய டி.ஜி.வைஷ்ணவா பெற்ற 5வது வெற்றி இதுவாகும். இது சுங்க இலாகா தொடர்ந்து சந்தித்த 6வது தோல்வியாகும். மற்றொரு ஆட்டத்தில் இந்தியன் வங்கி 2518, 2522, 2624 என்ற நேர்செட்டில் ஐ.சி.எப்.பை வீழ்த்தி 4வது வெற்றியை தனதாக்கியது.

நடைபெறும் ஆட்டங்களில் தமிழ்நாடு போலீஸ்சுங்க இலாகா (மாலை 4 மணி), இந்தியன் வங்கிஎஸ்.ஆர்.எம். (மாலை 6.30 மணி) அணிகள் மோதுகின்றன. முன்னதாக மாலை 6 மணியளவில் ஆசிய விளையாட்டு, ஆசிய பெண்கள் சீனியர் சாம்பியன்ஷிப், உலக பல்கலைக்கழக விளையாட்டு மற்றும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற இந்திய அணியில் இடம் பிடித்த தமிழக வீரர், வீராங்கனைகள்மற்றும்பயிற்சியாளருக்குபாராட்டு விழா நடத்தப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது.

## ஆசிய விளையாட்டில் பதக்கம் வென்ற சென்னை மாணவருக்கு ரூ.3½ லட்சம் ஊக்கத்தொகை



சமீபத்தில் சீனாவில் நடந்த ஆசிய விளையாட்டில் ஸ்குவாஷ் போட்டியில் இந்திய வீரர் அபய் சிங் தங்கம் மற்றும் வெண்கலப்பதக்கம் வென்றார். இவர் சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரியில் எம்.பி.ஏ. 2ம் ஆண்டு படித்து வருகிறார். அவருக்கு நேற்று அந்த கல்லூரியில் பாராட்டு விழா நடந்தது.

விழாவில் கல்லூரி தாளாளர் மஞ்சித் சிங் நய்யார், துணைத் தலைவர் சர்தார் ஜஸ்பிர் சிங் நருலா, இந்திய ஸ்குவாஷ் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீசைரஸ் போஞ்சா, பயிற்சியாளர் பாலமுருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் அபய் சிங்குக்கு விருதுடன், குருநானக் கல்லூரி குழுமம் சார்பில் ரூ.3½ லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

## டென்மார்க் ஓபன் பேட்மிண்டன்: சிந்து அரைஇறுதிக்கு முன்னேற்றம்



டென்மார்க் ஓபன் பேட்மிண்டன்போட்டிஒடென்ஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் கால்இறுதி ஆட்டம் ஒன்றில் முன்னாள் உலக சாம்பியனும், தரவரிசையில் 12வது இடத்தில் இருப்பவருமான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, தரவரிசையில் 19வது இடத்தில் உள்ள தாய்லாந்தின் சுபனிதா கேத்தோங்கை எதிர்கொண்டார்.

இதில் சிந்து 2119, 2112 என்ற நேர்செட்டில் சுபனிதாவை விரட்டியடித்து அரைஇறுதிக்கு முன்னேறினார். இந்த வெற்றியை பெற அவருக்கு 47 நிமிடமே தேவைப்பட்டது. சிந்து அரைஇறுதியில் முன்னாள் ஒலிம்பிக் சாம்பியன் கரோலினா மரினை (ஸ்பெயின்) சந்திக்கிறார்.

அவருக்கு எதிராக 15 முறை மோதியுள்ள சிந்து அதில் 5ல் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 'உலகக் கோப்பை போட்டியில் இலக்கை விரட்டிப்பிடிப்பது முக்கியம்' இந்திய வீரர் சுப்மன் கில் பேட்டி

உலகக் கோப்பை கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் புனேயில் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வங்காளதேசத்தை வாட்டி வதைத்தது. இதில் வங்காளதேசம் நிர்ணயித்த 257 ரன் இலக்கை இந்திய அணி விராட் கோலியின் சதம் (103 ரன்) மற்றும் சுப்மன் கில்லின் அரைசதத்தோடு (53 ரன்) 41.3 ஓவர்களில் எட்டிப்பிடித்தது.

பின்னர் இந்திய தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் நிருபர்களிடம் கூறியதாவது:

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு முன்பாக, இலங்கையில் ஆசியகோப்பை போட்டியில் விளையாடிய போது அங்குள்ள ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாக இருந்தன. ஆனால் இங்கு முதல் ஆட்டத்திற்கு பிறகு, ஆடுகளம் சுழலுக்கு பெரிய அளவில் உதவிகரமாக இல்லை என்பது தெரிந்தது. இப்படிப்பட்ட சூழலிலும் மிடில் ஓவர்களில் எங்களது சுழற்பந்து வீச்சாளர்கள் ரவீந்திரஜடேஜாவும் (2 விக்கெட்), குல்தீப் யாதவும் (ஒரு விக்கெட்) பந்துவீசிய விதம் அற்புதம். அது தான் ஆட்டத்தின் போக்கை மாற்றியது. ஒரு கட்டத்தில் வங்காளதேசத்தின் தொடக்க ஆட்டக்காரர்கள் விளையாடிய விதத்தை பார்த்த போது அவர்கள் 300320 ரன்கள் வரை எடுக்கக்கூடும் என்று தோன்றியது. ஆனால் மிடில் ஓவர்களில் சுழற்பந்து வீச்சாளர்கள் அந்த கூட்டணியை உடைத்ததுடன், அவர்களை தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கி ரன்வேகத்தை கட்டுப்படுத்தினர். இது தான் ஆட்டத்தின் போக்கில் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. உலகக் கோப்பை போட்டிக்கு முன்பாக நடந்த தொடர்களில் நாங்கள் அதிக ஸ்கோரை விரட்டிப்பிடிக்கும் (சேசிங்) முயற்சியில் சிறப்பாக செயல்படவில்லை. முதலில் பேட்டிங் செய்யும்போது பெரும்பாலும் நிறைய ரன் குவித்து விடுகிறோம். ஆனால் 2வது பேட்டிங்கில் தடுமாறுவது குறித்தும், அதை சரி செய்வது குறித்தும் அணி வீரர்கள் கூட்டத்தில் விவாதித்தோம்.



தற்போது இந்த உலகக் கோப்பையில் விளையாடிய முதல் 4 ஆட்டங்களிலும் வெற்றிகரமாக 'சேசிங்' செய்திருக்கிறோம். இது போன்ற பெரிய போட்டிகளில் 'சேசிங்' செய்வது மிகவும் முக்கியமானது. பேட்ஸ்மேன்களிடம் இருந்து நம்பிக்கையை பெற்று விட்டால் போதும். அது, இது போன்ற ஆட்டங்களில் சேசிங் செய்வதற்கு உதவிகரமாக இருக்கும். இதே உத்வேகத்தை அடுத்து வரும் போட்டிகளுக்கும் முன்னெடுத்து செல்ல வேண்டியது அவசியம்.

உடல்நலக்குறைவால் (டெங்கு காய்ச்சல்) சில ஆட்டங்களை தவற விட்டது ஏமாற்றமாக இருந்தது. அதில் இருந்து மீண்டு களம் திரும்பியது உற்சாகம் அளிக்கிறது. உடல் நலம் பாதிப்பால் எடை குறைந்து விட்டேன். ஆனால் அதே உடல் எடையை மீண்டும் எட்டி விடுவேன் என்று நம்புகிறேன். இவ்வாறு கில் கூறினார்.

## தென் மண்டல சப்ஜூனியர் ஆக்கி: தமிழக அணியின் ஆட்டம் 'டிரா'

தமிழ்நாடு ஆக்கி அமைப்பு சார்பில் முதலாவது தென் மண்டல சப்ஜூனியர் ஆக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் 3வது நாளான நேற்று நடந்த பெண்கள் பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் தெலுங்கானாபுதுச்சேரி அணிகள் மோதின. இந்த ஆட்டம் 22 என்ற கோல் கணக்கில் 'டிரா'வில் முடிந்தது. இதேபோல் தமிழ்நாடுகேரளா அணிகள் இடையிலான விறுவிறுப்பான ஆட்டமும் 22 என்ற கோல் கணக்கில் 'டிரா'வில் முடிந்தது. தமிழக அணியில் ஸ்வாதி (4வது நிமிடம்), பிரியதர்ஷினி (22வது நிமிடம்) தலா ஒரு கோலும், கேரள அணியில் லட்சுமி, அபய் ஜோதி தலா ஒரு கோலும் அடித்தனர். மற்றொரு ஆட்டத்தில் ஆந்திர அணி 43 என்ற கோல் கணக்கில் கர்நாடகாவை வீழ்த்தியது. ஆண்கள் பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் புதுச்சேரி அணி 53 என்ற கோல் கணக்கில் கேரளாவை சாய்த்தது. இன்னொரு ஆட்டத்தில் ஆந்திரா 100 என்ற கோல் கணக்கில் தெலுங்கானாவை ஊதித்தள்ளியது. தமிழ்நாடுகர்நாடகா அணிகள் மோதிய திரில்லிங்கான ஆட்டம் 22 என்ற கோல் கணக்கில் 'டிரா'வில் முடிந்தது. தமிழக அணியில் சுகுமார் (4வது நிமிடம்), கவுதம் (36வது நிமிடம்) தலா ஒரு கோலும், கர்நாடக அணியில் ஜாஷன் தம்மையா (34வது, 55வது நிமிடம்) 2 கோலும் அடித்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.